


## உரிமமின்றி அந்நியத் தொழிலாளர்களை

# வேலைக்கு வைத்த 24 தலங்கள் மூடப்பட்டன!

**நமது நிருபர்**

பெட்டாலிங் ஜெயா, டிச.29- தலைநகரைச் சுற்றிலும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கை வாயிலாக 24 தலங்கள் மீது உடனடி மூடப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவையனைத்தும் சட்டப்பூர்வமான வர்த்தக உரிமங்களைக் கொண்டிருக்காத, அந்நியர்களை வேலைக்கு வைத்து பொது இடங்களில் இடையூறுகளை ஏற்படுத்தும் தலங்களாகும். இதில் 70 வர்த்தகத் தலங்கள் சோதனையிடப்பட்டு அவற்றின் வர்த்தக ஆவணங்களும் சரிபார்க்கப்பட்டன.

கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச சுற்றுப் பகுதியிலுள்ள இந்த அனைத்துத் தலங்கள் மீது 1976 ஊராட்சி சட்டத்தின் கீழ் மூடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.